Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 180

வெள்ளிக்கிழமை
24 மே 2024

வைகாசி 11 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"அப்ப தன்ர கையாலேயே கண்ணைக்குத்திற மாதிரி எங்கட ஆக்களைக் கொண்டே ஆப்பு வைக்கப் பாக்கினம் போல"

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 24

கஞ்சாவுடன் நவாலியில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறப்புக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார், சந்தேகத்துக்கு இடமாக 10

## தோட்டாவுடன் ஒருவர் கைது!

முல்லைத்தீவு, மே 24

முல்லைத்தீவுப் பகுதியில் துப்பாக்கித் தோட்டாக்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முள்ளியவளைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய முல்லைத்தீவு மாவட்ட மருத்துவ 10

## திருகோணமலையில் விபத்து; அல்வாய் சிறுமி பரிதாபப் பலி!

### சகோதரனுக்குப் படுகாயம்



யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் - வடமராட்சி அல்வாய் திக்கம் பகுதியைச் சேர்ந்த குடும்பமொன்று சுற்றுலாவுக்காகச் சென்றபோது, அவர்கள் பயணித்த கார் திருகோணமலை - ஈச்சிலம்பற்றுப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து 11

# பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கையை இறுக்குங்கள்!

### சர்வதேச ம.உ. கண்காணிப்பகத்தின் இயக்குநர் எலைன் கோரிக்கை



கொழும்பு, மே 24

இலங்கையின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்துக்கான ஆணையை செப்ரெம்பர் அமர்வில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை புதுப்பிப்பது மிகவும் அவசியம் என்று சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. 11

### மனித உரிமை என்ற போர்வையில்

## இலங்கையின் விவகாரத்தில் மேற்குநாடுகள் தலையீடாம்!

### ரஷ்யா தெரிவிப்பு

கொழும்பு, மே 24

மனித உரிமைகள் என்ற பெயரில் மேற்கு அரசியல் சக்திகள் இலங்கையின் உள்ளக விவகாரங்களில் தலையிடுகின்றன என்று கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகம் தெரிவித் 11

### திஸ்ஸ விகாரை

## போராட்டத்தைக் கட்டுப்படுத்த தமிழ்ப் பொலிஸாருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மே 24

தையிட்டி திஸ்ஸ விகாரைப் போராட்டம் இன்றும் தொடரவுள்ள நிலையில், போராட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு தமிழ்ப் பொலிஸார் சம்பவ இடத்தில் குவிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. 10

### ஆரியகுளத்தில் இராணுவத்தால்

## அனுமதியின்றி அலங்காரங்கள்

யாழ்ப்பாணம், மே 24

யாழ்ப்பாணம் - ஆரியகுளம் பகுதியில், யாழ்ப்பாணம் மாநகரசபையின் அனுமதி பெறப்படாமல்தான் வெசாக் அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆணையாளர் கிருஷ்ணேந்திரன் தெரிவித்துள்ளார். 11

## சிறுமி துஷ்பிரயோகம்; இளைஞர் தலைமறைவு

கிளிநொச்சி, மே 24

கிளிநொச்சியில் 14 வயதுச் சிறுமியொருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். அக்காவின் காதலனாலேயே அந்தச் சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் எனவும், சந்தேகநபர் தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. 11

## இந்தியாவின் மாநிலமாக இலங்கையை மாற்ற முயற்சி

### வீரவன்ஸ குற்றச்சாட்டு

கொழும்பு, மே 24

இலங்கையை இந்தியாவின் 29 ஆவது மாநிலமாக மாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயற்சிக்கிறார் என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமர் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு அவர் மேலும் 11

### கடல் கொந்தளிப்பு

## தீவகப் போக்குவரத்து இன்று இடம்பெறாது!


யாழ்ப்பாணம் – தீவகம் இடையிலான போக்குவரத்து இன்று இடம்பெறாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கடல் கொந்தளிப்புக் காரணமாகவே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, நெடுந்தீவு, எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கு இடையிலான போக்குவரத்தே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளது. (ம-26-125)

## தாழமுக்கம் புயலாகிறது

### வடக்கு – கிழக்கில் கனமழை

யாழ்ப்பாணம், மே 24

தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் புயலாக மாற்றம் பெற்று வருகின்றது என்றும், இதனால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கன மழைக்குச் சாத்தியம் 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ். புரளி தேர்தல் பின்புலமா?



எம்.முஷாரப் கேள்வி

கொழும்பு, மே 24

**இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட 4 இளைஞர்களின் சம்பவத்தை ஐ.எஸ்.ஐ.எஸ் ஸுடன் தொடர்புபடுத்தி இலங்கையில் முஸ்லிம் தீவிரவாதம் மேலும் தலை தூக்கப்போகிறது என்ற போர்வையில் தற்போது சில கருத்துகள் தெரிவிக்கப்பட்டு வருவதை ஏற்றுக்கொள்ள முடியாது.**

-இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் எம்.முஷாரப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கையைப் பொறுத்தவரை விரைவில் ஒரு தேர்தலை எதிர்பார்த்திருக்கும் ஒரு காலகட்டமாகும். அதனால் தேர்தல் வெற்றியை மையப்படுத்தி, புனையப்படுகின்ற ஒரு விடயமாக இது இருக்கக்கூடும். ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்ட காலமும் ஒரு தேர்தல் காலம். இலங்கையைப் பொறுத்தவரை தற்போதும் விரைவில் ஒரு தேர்தலை எதிர்பார்த்திருக்கும் ஒரு காலகட்டமாகும்.

ஒரு தேர்தலை வெற்றிகொள்வதற்காக இவ்வாறான தாக்குதல் அல்லது பயங்கரவாதம் போன்ற பொய்யான கருத்துகளைக்கொண்டு ஊடுருவுகின்ற அரசியல் சக்திகளை - தீய சக்திகளை தோற்கடிக்கின்ற பெரும் பொறுப்பு மக்களுக்கு இருக்கிறது.

உண்மையில் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட யாராவது கைதுசெய்யப்பட்டிருந்தால் உரியமுறையில் விசாரிக்கப்பட்டு உரிய தகவல் தெரிவிக்கப்படுவதை நாங்கள் வரவேற்கிறோம் - என்றார். (ச-இ)

# சீரற்ற காலநிலை:
## 17,325 குடும்பங்கள் பாதிப்பு ஒருவர் பலி; 11 பேர் காயம்

கொழும்பு, மே 24

நாட்டில் கடந்த ஓரிரு தினங்களாக நிலவும் சீரற்ற காலநிலையால் 13 மாவட்டங்களைச் சேர்ந்த 17ஆயிரத்து 325 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் மரம் முறிந்து விழுந்ததில் காலி மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இயற்கை இடர்களால் 11 பேர் காயமடைந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

27 குடும்பங்களைச் சேர்ந்த 122 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, வடக்கு, வடமத்திய , மேல், தென் மற்றும் வடமேல் மாகாணங்களில் பலத்த காற்று வீசும் என சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# பாடகரான விமல்

கொழும்பு, மே 24

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவே எழுதி தனது குரலால் பாடியுள்ள பாடலொன்று இணையத்தில் வெளியாகி வைரலாகி வருகின்றது. குறித்த பாடல் வெசாக்தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

வெவ்வேறு மனங்களை கொண்டவர்கள் இந்த மண்ணில் வாழ்கின்றார்கள். அனைத்து மக்களுக்கும் தியானத்தின் மகிமையை பிரதிபலிக்கும் நோக்கில் இந்தப் பாடல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நாம் முற்றத்தில் இருந்து எவ்வளவு விடயங்களை யோசிக்கின்றோம். மனித மனமும் சில சமயங்களில் முற்றத்தைப்போன்றதுதான். காரணம் சில நேரங்களில் ஆசைகள் எழுகின்றன. சில நேரங்களில் விரக்தி ஏற்படுகின்றது என்பதை இந்தப் பாடல் பிரதிபலிக்கும் விதமாக எழுதப்பட்டுள்ளது.

மேலும் என்னதான் வாழ்க்கை வாழ்ந்தாலும் தவத்தை புரிந்து கொண்ட மனதால் மட்டுமே உண்மையான சுகத்தை அனுபவிக்க முடியும். பௌத்தத்தை முழுமையாக நேசிப்பவர்களுக்கு அது ஒரு நாள் தெரியும் என்றும் பாடலில் குறிப்பிடப்படுகிறது. (ச-இ)

# இஸ்லாமிய அடிப்படைவாதம் மீள தலைதூக்குகின்றதாம்

கூறுகிறார் வீரசேகர



கொழும்பு, மே 24

பாரதிய ஜனதாக் கட்சியை சேர்ந்தவர்களையும், இந்துக்களையும் படுகொலை செய்வதற்காகவே நான்கு இலங்கையர்கள் இந்தியாவுக்குச் சென்று ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கொள்கையால் ஈர்க்கப்பட்டுள்ளனர். இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை அரசாங்கம் செயற்படுத்தவேண்டும்.

-இவ்வாறு நாடாளுமன்ற விவாதத்தில் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான துறை சார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர்மேலும்கூறியதாவது:

நாட்டு மக்கள் அச்சமின்றி, சுதந்திரமாக வாழவேண்டுமாயின் அடிப்படைவாதம் மற்றும் பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்படவேண்டும். உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் சிறுபான்மையினரின் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் வாக்குகளை இழக்கக்கூடாது என்பதற்காக அடிப்படைவாதச் செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பை சேர்ந்த நான்கு இலங்கையர்கள் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

அடிப்படைவாதச் செயற்பாடுகள் குறித்து மீண்டும் அச்சம் எழுந்துள்ளது.

ஆகவே இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் பரிந்துரைகளை அலட்சியப்படுத்தாமல் செயற்படுத்தவேண்டும்.

இல்லையேல் இலங்கையில் மீண்டும் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் போன்ற அடிப்படைவாதத் தாக்குதல்கள் இடம்பெறலாம் -என்றார். (ச-இ)

# அருங்காட்சியகமாக டாசன் பங்களா?

கொழும்பு, மே 24

கேகாலை மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க டாசன் பங்களாவை விற்கும் நடவடிக்கை தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் நேற்றுமுன்தினம் நாடாளு மன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

"பங்களாவை விற்கும் நடவடிக்கை தொடர்பாக அந்தப் பங்களாவின் ஊழியர்கள் தெரிவித்திருந்தனர். இன்றுவரை தங்கள் கருத்துக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று அவர்கள் தெரிவித்தனர்" என்று அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒரு காலத்தில் பிரித்தானியர் டாவ்சனின் வசிப்பிடமாக இருந்ததால் இந்த பங்களா வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தப் பங்களாவை விற்பனை செய்வதற்குப் பதிலாக அருங்காட்சியகமாக மாற்றவேண்டும் என்றும் அவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (எ-இ)

# ஞானசாரதேரருக்கு மன்னிப்பு இல்லை

கொழும்பு, மே 24

வெசாக் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதியால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ள 278 கைதிகளின் பட்டியலில் ஞானசாரதேரரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை.

இலங்கையின் பிரதான பௌத்த பீடங்களான மல்வத்தை, அஸ்கிரிய பீடங்கள் ஞானசாரதேரருக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். ஆயினும் ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ள 278 கைதிகளின் பட்டியலில் ஞானசாரதேரரின் பெயர் உள்ளடக்கப்படவில்லை. (எ-6)

# தொண்டு நிறுவனங்களின் நிதிகையாள்கைக்கு சட்டம்

கொழும்பு, மே 24

இலங்கையின் பாலின உரிமைகள், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக நிர்வாகம் போன்ற திட்டங்களுக்காக பல்வேறு வெளிநாட்டு அமைப்புகளிடமிருந்து நிதி பெறுகின்ற முன்னணித் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைக் கண்காணிக்க புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொண்டுநிறுவனங்களுக்குக்கிடைத்த நிதித்தொகைகள் தொடர்பில் உரிய கண்காணிப்புகள் இடம்பெறவில்லை. பதிவு செய்யப்பட்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு கடந்த ஆண்டு 33 பில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் அரசுசாரா நிறுவனங்களின் செலவுகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து முறையான சரிபார்ப்பை மேற்கொள்ளமுடியும் என்றும் பொதுப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# எரிபொருள் நுகர்வு அதிகரிப்பு

கொழும்பு, மே 24

வெசாக் வாரம் ஆரம்பமாகியுள்ள நிலையில் எரிபொருள் விற்பனை திடீரென அதிகரித்துள்ளதாக எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நாள்களில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் வழமையைவிட அதிகமான எரிபொருள் இருப்புகளை விண்ணப்பம் செய்துள்ளனர்.

இந்த வருடத்தின் ஆரம்பம் முதல் எரிபொருள் விற்பனை மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிக்கொள்கை மாற்றப்படாது!



அரசாங்கம் இறுக்கம்

கொழும்பு, மே 24

**மீண்டும் வரிசை யுகத்துக்கு இட்டுச் செல்வதற்கு எந்தக் காரணிகளுக்காகவும் தற்போதைய வரிக்கொள்கையை மறுசீரமைக்கப் போவதில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விவாதத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டார். பொருளாதார மீட்சிக்காக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள தீர்மானங்களை உலக நாடுகள் ஏற்றுக்கொண்டுள்ளன. எக்காரணிகளுக்காவும் தற்போதைய மறுசீரமைப்புகளை திருத்தம் செய்யப்போவதில்லை.

பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுப்பதைத் தடுக்கும் வகையில் நிதி முகாமைத்துவ சட்டவரைவு மற்றும் பொருளாதார நிலைமாற்றம் சட்டவரைவு நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வரிசை யுகத்தை எதிர்பார்ப்பவர்களே இந்தச் சட்டவரைவுகளுக்கு எதிராக வாக்களிப்பார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## நிதி முகாமை சட்டவரைவு மோசடிகளைக் கண்டறியும்

*நிதி இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டு*

கொழும்பு, மே 24

முன்வைக்கப்பட்ட பொது நிதி முகாமைத்துவ சட்டவரைவானது நாட்டில் முறையான நிதி முகாமைத்துவத்தை உருவாக்குவதற்கு பங்களிக்கும்.

-இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.

திறைசேரி செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இந்த வரைவில் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. திறைசேரி செயலாளர் மற்றும் தலைமைக் கணக்காய்வு அதிகாரியின் அதிகாரங்கள் சரியாக வரையறுக்கப்படாதது நெருக்கடிக்கு வழிவகுத்தது.

அத்துடன் குறித்த சட்டத்தின் ஊடாக சொத்துகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையும் மக்களுக்குக் கிடைக்கும்.

அதேவேளை சீனி வரி மோசடி மூலம் அரசாங்கத்துக்கு சுமார் 17 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## மின்தாக்கி ஒருவர் பலி

கொழும்பு, மே 24

காட்டு விலங்குகளை வேட்டையாடுவதற்காக சட்டவிரோதமாக அமைக்கப்பட்டிருந்த மின்கம்பிகளில் சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கெப்பிற்றிக்கொல்லாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட யக்காவெவ வனப் பகுதியில் நடந்துள்ளது. 36 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார். (எ-இ)

## மரங்கள்வீழ்ந்து பெண்கள் சாவு!

கொழும்பு, மே 24

வீதியோர மரங்கள் சரிந்து வீழ்ந்ததில் இரு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன் ஆண் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவங்கள் புத்தளம் மாராவில மற்றும் மாதம்பைப் பகுதிகளில் நடந்துள்ளன. (எ-இ)

## இலங்கைக்கு 76ஆவது இடம்

கொழும்பு, மே 24

உலகப் பொருளாதாரப் பேரவை உலக நாடுகளின் சுற்றுலா செயற்பாடுகளைத் தரப்படுத்தியுள்ள நிலையில், அந்தப் பட்டியலில் இலங்கைக்கு 76 ஆவது இடம் கிடைத்துள்ளது.

இலங்கை சுற்றுலா சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு, கலாசார வளங்கள் மற்றும் பொழுதுபோக்கு அல்லாத செயற்பாடுகள் பிரிவுகளில் மோசமான மதிப்பெண் பெற்றுள்ளது, அதே நேரத்தில் போட்டித்தன்மை மிக்க விலை மற்றும் பயணம், சுற்றுலா சமூக பொருளாதாரத் தாக்கம் ஆகியவற்றில் அதிக மதிப்பெண் பெற்றுள்ளது. இந்தப் பட்டியலில் 2021 ஆம் ஆண்டு 74ஆவது இடத்தில் இருந்த இலங்கை, தற்போது 119 நாடுகளின் தரவரிசையில் 76 ஆவது இடத்துக்குச் சென்றுள்ளது. (எ-இ)

## நாட்டை வலுப்படுத்துவதற்கு பாதுகாப்பு ஏற்பாட்டுச் சட்டம்



ஜனாதிபதி தெரிவிப்பு

நாடு தற்போது பொருளாதார ரீதியில் முன்னேற்றம் கண்டு வரும் நிலையில் தேசியப் பாதுகாப்பு விசேட ஏற்பாடுகள் சட்டத்தை சமர்ப்பிக்கவும் தேசியப் பாதுகாப்புச்சபையை சட்டபூர்வமாக்குவதற்கும் ஆயுதப்படை குழுவை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லவில் நடைபெற்ற இலங்கை முன்னாள் படைவீரர்கள் சங்கத்தின் தலைமையக வளாகத் திறப்பு விழா நிகழ்வில் பங்கேற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

நாட்டின் ஒற்றுமைக்கு பயங்கரவாதம் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார வீழ்ச்சி, நாட்டின் ஒற்றுமைக்கு மற்றோர் அச்சுறுத்தலாக மாறியது. இந்நிலை நீடித்தால் நமது நாடு பொருளாதாரம் இல்லாத நாடாக அதாவது இன்னொரு லிபியாவாக மாறிவிடும். போரின் போது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கேற்ப செயற்படவேண்டும்.

ஆயுதப்படையில் ஈடுபடுபவர்கள், ஓய்வுபெற்றவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு போர்த்தந்திரங்களைக் கற்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் இலங்கை மூலோபாயக் கற்கைகள் [illegible] கிறது [illegible] (ச-இ)

## தினம் தெரியுமோ?

கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பான கதையா, வெள்ளி, ஞாயிறில ரியூசன்களுக்குப் போட்ட கட்டுப்பாடும் மாறிப்போட்டுது. சட்டம் போட்டவர் பெஞ்சனில போனவுடன அதைப்பற்றி கவனிக்க ஆக்களில்லை எண்ட தைரியத்தில எல்லா ரியூட்டரியளும் இப்ப வெள்ளி, ஞாயிறிலையும் கிளாஸ் வைக்கத் தொடங்கிட்டினம். அதால பழையபடி பிள்ளையள் வீட்ட நிக்கவோ, அறநெறி வகுப்புகளுக்கு போகவோ, கிரவுண்டுக்குப் போய் விளையாடவோ நேரமில்லாமல், காலில சில்லைக் கட்டினமாதிரி ரியூசனுக்குப் பறந்து திரியுதுகள். அதைவிட இந்த வெள்ளி, ஞாயிறில போட்ட தடையால இன்னொரு புதுப்பழக்கமும் சில ரியூசன்களில தொடங்கி, இன்னும் அது பரவிக்கொண்டிருக்குதாம். இரவிலயும் கிளாஸ் வைக்கிறதுதான் அந்த வருத்தம்.

கிழமையில ரண்டுநாள் வகுப்பு வைக்க ஏலாது எண்டவுடன, இந்த ரியூட்டரிக்காரர் கண்டுபிடிச்ச வழிதான், இரவுநேர வகுப்பு. வெள்ளி, ஞாயிறில வைக்கவேண்டிய கிளாஸ்களை மற்ற நாளுகளில, பின்னேரத்துக்கு பிறகு வைச்சு 'கவர்' பண்ணினவை. 'சிலபஸை முடிக்க எங்களுக்கு வேற வழியில்லை' எண்டு ரியூசன்காரர் சொன்னதுக்கு பெற்றோரும் தலையாட்டினதால, பிள்ளையளை இரவு எட்டு, ஒன்பது மணி மட்டும் வைச்சுப் படிப்பிச்சுப் போட்டுத்தான் விட்டவை. இதால சிலபஸைக் 'கவர்' பண்ணிச்சினமோ இல்லையோ, தங்கட வருமானம் கெட்டுப் போகாமல் ரியூட்டரிக்காரர் 'கவர்' பண்ணிப் போட்டினம். அதோட கொலஷிப், ஏ.எல், ஓ.எல் எண்டு எக்ஸாமுகள் நெருங்க நெருங்க , இந்த இரவுக் கிளாஸ் நடக்கிற நேரமும் கூடிக்கொண்டே போட்டுது. பிள்ளையளை வகுப்புக்கு அனுப்பிப் போட்டு, பெற்றார் றோட்டு வழியில ஏமம் சாமமா வெயிட் பண்ணி, பிறகு கிளாஸ் முடிய ஏத்திக் கொண்டு போறதைப் பாக்கப் பாவமா இருக்கும். அதைவிட இப்பிடி எல்லாப் பெற்றாரும் வந்து பிள்ளையளை ஏத்தி இறக்க வசதி இருக்காது. அப்பிடியான பிள்ளையள் அந்த இரவிலையும் நடந்தோ, சைக்கிளிலையோ தனியத்தான் போகோணும்.

இப்ப திரும்ப வெள்ளி, ஞாயிறில கிளாஸ்களை வைக்கத் தொடங்கினாலும், இரவுக்கிளாஸ் வைக்கிறதை ரியூட்டரியள் கைவிடேலை. அதால இந்த மழைக்குள்ள, இருட்டுக்குள்ள பிள்ளையள் தனியப் போகுதுகள். அதிலயும் சில இடங்களில பொம்பிளைப் பிள்ளையள் இப்பிடி தனியப் போறதைப் பாக்க, அந்த ரியூட்டரிக்காரரில ஆத்திரம் தான் வருகுது. ரவுண் ரியூட்டரியள் மட்டுமில்ல, உள்ளூர் ரியூட்டரியள் தான் இந்த 'நைட் கிளாஸ்'வைக்கிறதில மும்முரமா நிக்கினமாம். உடையவன் இல்லாட்டி ஒருமுழம் கட்டையெண்ட நினைப்பில, தங்களைக் கேள்வி கேக்க ஆருமில்லையெண்டு உவையள் செய்யிற இந்த வேலைக்கு ஆர் முற்றுப்புள்ளி வைப்பினம்?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA




S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence

CONSTRUCTION PARTNER
LINK ENGINEERING
A LEGENDARY CONSTRUCTION TYCOON SINCE 1981
A RENOWNED CONSTRUCTION LEGEND

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA



FACULTY OF ENGINEERING & BIO SYSTEM TECHNOLOGY AT ARIVIYAL NAGAR, KILINOCHCHI.



FACULTY OF MEDICINE BUILDING UNIVERSITY OF JAFFNA



FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA IN KILINOCHCHI



WATER BOARD BUILDING - JAFFNA



COURT COMPLEX - CHAVAKACHCHERI



FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA IN KILINOCHCHI



RDD OFFICE - JAFFNA

ONGOING CONDOS & HOUSING PROJECTS

- NO 06, 19TH LANE, COLOMBO 03.
- NO 30, HOTEL ROAD, MOUNT LAVINIA.
- NO 15A, LAYARDS ROAD, COLOMBO 04.
- NO 35, RAMAKRISHNA RD, COLOMBO 06.
- NO 34/2, DE SERAM ROAD, MOUNT LAVINIA.
- NO 01, HAVELOCK PLACE, COLOMBO 05.
- NO 358, HIGH LEVEL ROAD, NUGEGODA.
- NO 02, GLENFALL ROAD, NUWARA ELIYA.

www.blueocean.lk | www.kelsey.ik

CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place,
Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582
Hotiline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road,
Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949
Mobile : +94 771 546 539



KELSEY HOUSE



KELSEY VILLA



FAMILY VILLA



HARMONY PARK



# சிறப்புற நடைபெற்றது கேதீஸ்வர தீர்த்தத் திருவிழா

மன்னார், மே 24

வரலாற்றுச்சிறப்புமிக்க திருக்கேதீஸ்வர ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா, அண்மையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ச்சியாக திருவிழா இடம்பெற்று வருகின்றது. திருக்கேதீஸ்வர ஆலயத்தின் தீர்த்த உற்சவம்நேற்றுமுன்தினம்புதன்கிழமை சிறப்பாக இடம்பெற்றது. (ப-56)

# கலாசார விழா

பளை, மே 24

பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்தின் இந்த ஆண்டுக்கான கலாசாரவிழாவுக்கான முன்னாயத்தக் கருத்தமர்வு, பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-9)

# முருங்கன் மக்களை அச்சுறுத்தும் யானை

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**மன்னார், மே 24**

**மன்னார் முருங்கன் பகுதியில் தனித்து நடமாடும்யானை ஒன்றால்உயிர்அச்சம் எழுந்துள்ளது. இந்த யானையை அங்கிருந்து வெளியேற்ற அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

நேற்று வியாழக்கிழமை இரண்டாவது நாளாகவும் தனித்து காட்டு யானை ஒன்று நடமாடித் திரிகின்றது. இதனால் மக்கள் பீதியுடன் போக்குவரத்துச் செய்ய நேரிடுகிறது.

இந்த யானையைப் பிடித்து பிறிதொரு இடத்துக்கு கொண்டு செல்ல அதிகாரிகள் துரித நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் கோரியுள்ளனர். (ச-56)



# யாத்திரை நூல் வெளியீடு

வவுனியா, மே 24

வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் நவரத்தினம் கபிலநாத்தின் யாத்திரைநூல், வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக மனித உரிமை செயற்பாட்டாளரும் தைரியமிக்க பெண்களுக்கான அமெரிக்க அரசாங்கத்தின் விருது பெற்றவருமான சட்டத்தரணி திருமதி ரனித்தா ஞானராசா, வவுனியாபல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி.மங்களேஸ்வரன் மற்றும்வீரகேசரியின் பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் தலைவர் கலாநிதி தமிழ்மணி அகளங்கனும் ஆய்வாளரும் மூத்த ஊடகவியலாளருமான தமிழ்நிதி அருணா செல்லத்துரை எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ப-18)

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 24

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம், சங்கத்தின் ஸ்ரீ பாஸ்கரன் ஞாபகார்த்த மண்டபத்தில், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் இ.நாகேந்திரம் தலைமையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு செயலாளர் செ.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (ப)



பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பொருண்மியம் நலிவுற்ற குடும்பங்களின், பாடசாலை செல்லும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், நன்நடத்தை பாதுகாவல் மற்றும் சிறுவர் கவனிப்புச் சேவைகள் திணைக்களத்தால், பிரதேச செயலாளர் இ.த.ஜெயசேகரம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை வழங்கப்பட்டன. (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# சிறுபான்மையின வெறுப்பும் அரசியல் முதலீடும்

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இலங்கையைச் சேர்ந்த நான்கு முஸ்லிம் இளைஞர்கள் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் கைது செய்யப்பட்டு, தீவிர விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டு வருகின்றனர். இந்த நால்வரும் இந்தியாவில் நாசகாரச் செயல்களை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தனர் எனவும் தற்கொலைத் தாக்குதல்களை நடத்தும் நோக்கத்துடனேயே இந்தியாவுக்கு வந்தனர் என்றும் குஜராத் பொலிஸார் கூறினர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன. அவர்களுக்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும் இடையே தொடர்பிருப்பதை உறுதிப்படுத்தும் காணொலிப் பதிவுகள் சிக்கியிருப்பதாகவும் சொல்லப்படுகின்றது. ஆனால் இந்தியாவிலும் இலங்கையிலும் தேர்தல் மேகம் சூழ்ந்துள்ள தருணத்தில் இந்தக் கைதுகள் பலவிதமான சந்தேகங்களையும் கிளறத் தவறவில்லை.

இந்தியாவின் ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் அரசியல் மூலதனம் முற்றுமுழுதாக சிறுபான்மையினர் மீதான வெறுப்புணர்வையே மையமாகக் கொண்டது. குறிப்பாக முஸ்லிம் மக்களை அடக்கி ஒடுக்குதல், அவர்களின் மதத் தலங்களை இடித்தல், பயங்கரவாத முத்திரை குத்தி முஸ்லிம்களை சிறைக்குள் அடைத்தல் , கலவரங்களை உருவாக்குதல் என்பனதான் பாரதிய ஜனதாக் கட்சியின் அரசியல் பாலபாடங்கள். ஏறக்குறைய இதே அணுகுமுறையைத்தான் இலங்கையில் பௌத்த-சிங்களப் பேரினவாதமும் கைக்கொண்டது. ஆனால் இங்கே முஸ்லிம்களுக்குப் பதிலாக ஆரம்பத்தில் தமிழ் மக்களையே இவ்வாறு பயங்கரவாதத்தின் பெயரால் அடக்கி, ஒடுக்கி, அழிக்கும் வேலைகளை சிங்கள - பௌத்தப் பேரினவாதம் மேற்கொண்டது. வேடிக்கை என்னவென்றால், தாமும் ஒரு சிறுபான்மையினர் என்பதை மறந்துவிட்டு பெரும்பாலான முஸ்லிம்கள், இவ்வாறு தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை ஆதரித்ததுதான். ஆனால் காலச்சக்கரத்தின் சுழற்சி மாறியது. இனிமேல் தமிழர்களை அழிப்பதன் மூலம் தங்கள் வாக்குவங்கியைப் பேண முடியாது என்று தெரிந்தவுடன், முஸ்லிம்கள் பக்கம் திரும்பியது பேரினத்தின் பார்வை. ஈஸ்டர் தாக்குதல் முஸ்லிம்கள் மீதான அத்தனை வன்மங்களையும் தீர்ப்பதற்கான திறவுகோலானது. முஸ்லிம்கள் மீதான இந்த ஒடுக்குமுறையை மூலதனமாகக் கொண்டே ராஜபக்சக்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்திருந்தனர்.

'அரகலய' போராட்டத்தால் ராஜபக்சக்கள் ஆட்டம் கண்டு பதவிகளை விட்டு ஓடினர். அவர்களின் கட்சி இப்போதும் ஆட்சியில் இருந்தாலும், இனிமேல் மக்கள் அந்தக் கட்சிக்கு முன்னரைப் போல பெருவாரியாக வாக்களிப்பார்களா என்பதும் சந்தேகமே. ஏறக்குறைய இந்தியாவிலும் பாரதிய ஜனதாக் கட்சியின் முஸ்லிம்கள் மீதான ஒடுக்குமுறையை அரசியல் மூலதனமாக்கும் உத்தியும் காலாவதியாகத் தொடங்கிவிட்டது. இப்போது அங்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் கடந்த முறையை விடவும் மோடி அரசின் செல்வாக்கு மக்களிடத்தே சரிந்துவிட்டதாக கருத்துக் கணிப்புகள் கட்டியம் கூறுகின்றன. பாரதிய ஜனதாக் கட்சி அடுத்த கட்டத் தேர்தல்களில் கொஞ்சம் அசந்தாலும், காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் ஆட்சியைப் பிடிக்கும் சாத்தியங்களும் தென்படுகின்றன. எனவேதான் 'முஸ்லிம் பயங்கரவாதம்' என்ற புழுதிபடிந்துபோன கோஷத்தை தூசுதட்டி, அதற்கு இன்னும் வலுச்சேர்த்து, மக்கள் மனங்களை மடைமாற்றி, வாக்குகளை தம் பக்கம் இழுக்க வேண்டிய தேவை இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள ஆளும் கட்சிகளுக்கு ஏககாலத்தில் எழுந்திருக்கின்றன. அதற்காக அவை எந்த நாடகத்தை நடத்தவும் தயார். ஒருவேளை குஜராத்தில் நடந்த கைதும் கூட இந்த நாடகத்தின் ஓரங்கமாக இருக்கலாம். ஏனெனில் அப்பாவிகளுக்கு எப்படியெல்லாம் 'பயங்கரவாதச்' சாயம் பூசி, கொன்றொழிப்பார்கள் என்பதை கண்[illegible] காலங்காலமாக கண்டுணர்ந்தவர்களல்லவா நாம்?





# சர்வதேச ஒத்துழைப்பு இலங்கைக்கு அவசியம்

அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, மே 24

**சர்வதேசத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் நாட்டை ஒருபோதும் முன்னேற்றமுடியாது. நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு சர்வதேச ரீதியில் கடனுதவிகளைப் பெற்றுக்கொள்ள நேரும் என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2001 ஆம் ஆண்டிலிருந்தே நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்து நிலையை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது. அந்நியச் செலாவணி வீதம் கட்டுப்படுத்த முடியாமல் போனது. எனவே நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு சர்வதேச ரீதியில் கடனுதவிகளைப் பெற்றுக்கொள்ள நேரும். சர்வதேசத்தின் ஒத்துழைப்பு இல்லாமல் நாட்டை அபிவிருத்தி செய்யமுடியாது. நாட்டுக்கு ஏற்படும் அழிவுக்கு தனியாகவோ அல்லது ஒருமித்தோ தற்போதைய அரசாங்கமே பொறுப்புக் கூற வேண்டும் - என்றார். (ச-இ)

# காஸா நிதியத்துக்கு ரூ.40 மில்லியன் நிதி

கொழும்பு, மே 24

சீனங்கோட்டை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் சங்கம், காஸா சிறுவர் நிதியத்துக்கு சுமார் 40 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதற்கான காசோலை நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சீனங்கோட்டை இரத்தினக்கற்கள் மற்றும் ஆபரண வர்த்த க சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மர்ஜான் பலீலினால் கையளிக்கப்பட்டது. (ச-இ)

# விசேட பாதுகாப்பு

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு நாட்டில் விசேட பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். இந்தப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 18 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

# 36 ஆயிரத்து 900 மின் செயலிழப்புகள்

கொழும்பு, மே 24

சீரற்ற காலநிலை காரணமாக 3 நாள்களில் 36 ஆயிரத்து 900 மின்சார செயலிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மின்சார செயலிழப்புகள் மற்றும் மின்சார விநியோகத்தை வழமைக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# 278 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, மே 24

வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு 278 கைதிகளுக்கு விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வெசாக் பூரணை தினத்தை முன்னிட்டு நேற்றும் இன்றும் கைதிகளைப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

## நாளை

25.05.2024

சனிக்கிழமை

வைகாசி - 12

சுபநேரம் : [illegible].52 - 04.22

ராகுகாலம் : 08.52 - 10.22

## நாளொரு நல்வார்த்தை

ஒவ்வொருவரும் உலகத்தை
மாற்ற நினைக்கிறார்களேயொழிய
தம்மை மாற்றிக்கொள்ள
நினைப்பதில்லை

-லியோ டால்ஸ்டாய்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். காரமான உணவுகளைத் தவிர்க்கவும்.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். அதிகாரிகளால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதர வகையில் சிறு சிறு சங்கடங்கள், வீண் செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உறவினர்களிடம் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். உதவி கிடைக்கும். மனதுக்கு உற்சாகம் தரும். வியாபாரத்தில் விற்பனையும் லாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். இலாபம் அதிகரிக்கும். தடைகள் விலகி நன்மைகள் அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் நிதானத்துடன் செயற்படவும். புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். அனுசரித்துச் செல்வது நல்லது. செலவு செய்யவேண்டியிருக்கும். கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும்.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. வியாபாரத்தில் போட்டியாளர்களின் தொல்லைகளைச் சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள். நன்மைகள் அதிகரிக்கும்.திடீர்ச் செலவுகள் ஏற்படும்.

**துலாம்:** எதிர்பார்க்கும் காரியம் சாதகமாக முடியும். சங்கடங்கள் நீங்கும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. செலவுகளில் திட்டமிடுதல் அவசியம். அம்பிகையை வழிபடுவதன் மூலம் மனதில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**விருச்சிகம்** : புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்புண்டு. செலவு செய்வீர்கள். வீண்பிரச்சினை ஏற்படலாம்.

**தனுசு:** காரியங்கள் இழுபறியானாலும் சாதகமாக முடியும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். நற்பலன்கள் அதிகரிக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். அதே நேரம் செலவுகளும் அதிகரிக்கும். காரியம் முடிவது இழுபறியாகும். நல்ல தகவல் இன்று உங்களுக்குக் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளில்துணிந்து இறங்கலாம். சிலருக்குக் குடும்ப விடயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். சகோதர வகையில் நன்மை ஏற்படும். மறைமுகத் தொல்லைகள் ஏற்படும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்துவிடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் இலாபம் உண்டாகும்.




### யாழ்.நகரில்
# மோப்ப நாய்களுடன் பொலிஸார் சோதனை

யாழ்ப்பாணம், மே 24

போதைப்பொருள்கள் மற்றும் கடத்தல் பொருள்களைக் கண்டறிய நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் உள் வீதிகள் மற்றும் பிரதான வீதிகளில் மோப்ப நாய்களுடன் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஏ-9 வீதியில் மோப்ப நாய் சகிதம் பொலிஸார் தனியார் வாகனங்கள், இ.போ.ச பேருந்துகள் உட்பட அனைத்து வாகனங்களையும் சோதனைக்குட்படுத்தினர்.

அத்துடன் சாரதி அனுமதிப்பத்திரம், வரிப் பத்திரம், வாகன அனுமதிப்பத்திரம் போன்ற ஆவணங்கள் என்பனவும் பரிசோதிக்கப்பட்டன. (ச-555)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-17)



பருத்தித்துறை - தும்பளை தம்புருவளை சித்தி விநாயகர் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை சிறப்புற இடம்பெற்றது. (ச-9)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம். மே 24

'பலஸ்தீன மண்ணின், காஸாவில் மரண ஓலம் விழிக்குமா உலகம்?' எனும் தொனிப் பொருளிலான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டக் கலந்துரையாடல் கே.கே.எஸ். வீதி கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் தலைமையுரையை யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலை சிரேஷ்ட பதிவாளர் ஆர்.கிருஷ்ணகுமாரும், ஆய்வுரையை சர்வதேச செய்தி ஆய்வாளரும், இலங்கை திறந்த பல்கலைக்கழக வெகுஜன ஊடகம் மற்றும் தொடர்பாடல் கற்கைத்துறையின் விரிவுரையாளருமான கனகநாயகம் வேல் தஞ்சனும் ஆற்றவுள்ளனர். (25)

## ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

யாழ்ப்பாணம், மே 24

மருத்துவ வரலாற்றில் ஒரு கருவில் 4 குழந்தைகளை ஆரோக்கியமான முறையில்தாயொருவர்பிரசவித்துள்ள சம்பவம் மட்டக்களப்பு போதனா மருத்துவமனையில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு ஒரே சூலில் 4 குழந்தைகள் பிறக்கும் செயற்பாடானது 5 இலட்சத்து 70ஆயிரம் தாய்மார்களிலேயே இடம் பெறுகிறது. அதுவும் செயற்கை முறையிலான கருத்தரிப்பு மூலமே அவ்வாறான விடயமும் சாத்தியமாகும்.

இந்தநிலையில், இயற்கையாக கருத்தரித்து சுகப்பிரசவமாக 4 குழந்தைகளை இந்த தாய் பிரசவித்தமையானது மருத்துவத்துறையில் மிகவும் அரிதான விடயமாக பார்க்கப்படுகிறது. பிறந்த நான்கு குழந்தைகளும் மிகவும் ஆரோக்கியத்துடன் உள்ளன என மருத்துவமனை வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)





## மன்னார் மாணவிகள் தேசியரீதியில் சாதனை

மன்னார், மே 24

தேசிய ரீதியிலான உதைபந்தாட்டப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்த மன்னார் வட்டக்கண்டல் பாடசாலை மாணவிகளைக் கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் எப்.எக்ஸ். அன்ரன் சேவியர் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (25-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கா நினைவுகளுடன் முதலாம் ஆண்டில்



தோற்றம் 29.08.1942 — மறைவு 04.06.2023

## அமரர் சுப்பையாபிள்ளை கந்தசாமி

திதி : வைகாசி தேய்பிறை பிரதமை


எம் ஆருயிர் தெய்வமே!
ஆலமர விருட்சமாய் வேரூன்றி - எம்மை
ஆற்றுப்படுத்தி வழிகாட்டினீர்!
ஆண்டொன்று கடந்ததப்பா! இன்னும்
ஆறவில்லை எங்கள் மனம்!
கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
காற்றுடன் கலந்து - தொடர்ந்தும்
உயிர்மூச்சாய் வழிகாட்டுவீர்!
உணர்கின்றோம் அப்பா!
**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

மகள்
பா.கஜவதனி
077 228 1881

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
உறவினர்கள், நண்பர்கள்.

(CS/55155) J-1

# 3ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22.08.1949 — மறைவு 27.05.2021

வைத்திய கலாநிதி

## நடராசா கிருஸ்ணராசா

ஆண்டுகள் மூன்று ஆகிவிட்டன
ஆறவில்லை எம் மனது
நீங்கள் கண்ணை விட்டு போனாலும் - எம்
கருத்தை விட்டுப் போகவில்லை
மண்ணை விட்டு போனாலும் - எம்
மனதை விட்டுப் போகவில்லை
உங்கள் அன்பான பேச்சுடனும்
பாசமான பார்வையுடனும்
எம்முடனேயே நீங்கள்
என்றும் வாழ்கின்றீர்கள்.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்

(CS/549) J-1

# ஜெகந்நாதரின் ரத யாத்திரை

யாழ்ப்பாணம், மே 24

ஸ்ரீ ஜெகந்நாதரின் ரத யாத்திரை நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது.

இந்த யாத்திரை கிளிநொச்சி கனகபுரம் ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கரடிப்போக்குச் சந்தியை அடையவுள்ளது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் பங்கேற்கவுள்ளார். (ச)

# முல்லை. மாவட்டத்தில் இரு நிகழ்வுகளில் ரணில்

முல்லைத்தீவு, மே 24

வடக்குக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு நிகழ்வுகளில் பங்குபற்றவுள்ளார்.

நாளை மறுதினம் முல்லைத்தீவு செல்லும் ஜனாதிபதி, புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி கலையரங்கில் நடைபெறவுள்ள இலவச காணிப் பத்திரம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொள்வார்.

அன்று மாலை மாங்குளம் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மாங்குளம் புனர்வாழ்வு மருத்துவமனை திறப்பு விழாவிலும் கலந்துகொள்ளவுள்ளார். (எ-19)

# மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 04 . 1975 — இறப்பு 23 . 05 . 2024

## வாசுகி பிரசிந்தன்

அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாசுகி பிரசிந்தன் (23.05.2024) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பெருமாள்பிள்ளை மற்றும் லோகாம்பாள் தம்பதியரின் சிரேஸ்ட புத்திரியும், அமரர் ஜதீஸ்வரன், ராஜ்குமார், வாமதி ஆகியோரின் சகோதரியும், பிரியங்கா, பிரவீனா, சஞ்சய் ஆகியோரின் அன்புத் தாயாரும், கவிப்பிரியன், ஆகாஷ் ஆகியோரின் மாமியாரும், மேக்நாத் பிரித்வியின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.05.2024) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

71, கலைமகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
[illegible]
076 021 9243
076 887 5602

(CS/563) J-1

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் சிவகுரு கணேசமூர்த்தி

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 22.05.2024 புதன்கிழமை காலை 07.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் அன்னாரது இல்லத்திலும் நடைபெற்றன. அன்னாரது ஆத்மாசாந்திப் பிரார்த்தனை இன்று (24.05.2024) வெள்ளிக் கிழமை பகல் 11.30 மணியளவில் திருநெல்வேலி சிவகாமி மஹால் மண்டபத்தில் இடம்பெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

மேலும் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல், Rip Book ஆகியவை மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள் மற்றும் மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் இன்றுவரை எமக்கு சகல உதவிகளையும் செய்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எமது [illegible] மார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இல. [illegible] இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

குடும்பத்தினர்
077 618 9054

(CS/55158) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கருகம்பனை - அந்திரானை
# கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலயம்

## வருடாந்த மரபுவழி வேள்விப்பொங்கல் - 2024

## விளக்கு வைப்பு 24.05.2024 வெள்ளிக்கிழமை

## வேள்விப்பொங்கல் 01.06.2024 சனிக்கிழமை

## எட்டாம் மடை 07.06.2024 வெள்ளிக்கிழமை

கருகம்பனை அந்திரானை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த மரபுவழி வேள்விப்பொங்கலிற்கான விளக்குவைப்பு இன்று (24.05.2024) வெள்ளிக்கிழமை இரவு 7.00 மணியளவில் இடம்பெற்று 01.06.2024 சனிக்கிழமை வேள்விப்பொங்கலும் 07.06.2024 வெள்ளிக்கிழமை எட்டாம்மடையும் இடம்பெறவுள்ளன.

**குறிப்பு -** வேள்விப்பொங்கல் தினத்தன்று வழமை போன்று கிடாய்கள், சேவல்கள் காணிக்கையாக்கப்பட்டு நேர்த்திகள் நிறைவேற்றப்படும் என்பதுடன் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாகவே வேள்விப்பொங்கல் இடம்பெறவுள்ளது.

## விளம்பர அனுசரணையாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| சாரங்கன் உணவகம்<br>நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.<br>T.P.: 0765460149 | பிரகலாத் & அருண் பல்பொருள் வாணியம்<br>நகுலேஸ்வரா வீதி, கீரிமலை.<br>T.P.: 077 395 7583 | Abi cakes<br>நகுலேஸ்வரா வீதி கருகம்பனை<br>T.P.: 077 577 4800 | ஐஸ்வர்யா சைவ உணவகம்<br>நகுலேஸ்வரா ஆலய முன்றல் கீரிமலை<br>T.P.: 075 452 3611 |
| நாச்சிமார் கட்டிடபொருள் விற்பனை நிலையம்<br>மெய்கண்டான் வீதி, இளவாலை.<br>T.P: 077 621 7464 | மாயவன் ஹாட்வெயார்<br>பிரதான வீதி, இளவாலை.<br>T.P: 077 271 4900 | சவீனன் சவுன்ஸ் & ஒளி அமைப்பு<br>சித்திரமேழி இளவாலை.<br>T.P: 077 353 4626 | அம்பிகை திருமண சேவை<br>வடலியடைப்பு பண்டத்தரிப்பு<br>T.P: 077 176 5251 |
| அம்பாள் கிறேசர் & நரசிங்க வைரவர் ரான்ஸ்போட்<br>மயிலங்கூடல் இளவாலை.<br>T.P.: 077495 4903 | சத்யா மல்ரி சென்ரர்<br>நகுலேஸ்வரா வீதி, கருகம்பனை.<br>T.P: 077 716 9055 | ஸ்ரீ துர்க்கா அரைக்கும் ஆலை<br>கருகம்பனை சந்தி கருகம்பனை<br>T.P: 077 614 0907 | ஓம் மல்ரி சென்ரர்<br>மகாஜனக் கல்லூரி முன்பாக தெல்லிப்பழை<br>076 708 4466 |
| கே.கே.எஸ். ஐங்கரன் குளிரகம்<br>காங்கேசன்துறை.<br>T.P.: 077 935 2707 | விநாயகர் விவசாய களஞ்சியம்<br>அம்பனை சந்தி தெல்லிப்பளை.<br>T.P: 077 945 5946 | ஓவியா பல்பொருள் வாணிபம்<br>மயிலங் கூடல் இளவாலை<br>T.P: 077 606 6053 | சாய்ராம் இஞ்சினியரிங்<br>நகுலேஸ்லரா வீதி, கருகம்பனை<br>T.P:077 727 9205 |
| நியூமற்ஸ் அக்கடமி<br>வைத்தியசாலைக்கு அருகாமை இளவாலை<br>T.P.: 077 368 1149 | சந்நிதியான் பிறிண்டேர்ஸ்<br>கே.கே.எஸ் வீதி, மல்லாகம் தெல்லிப்பழை.<br>077 360 5009 | ஸ்ரீ துர்க்கா மல்ரி சொப்<br>கே.கே.எஸ் வீதி தெல்லிப்பழை<br>T.P: 077 362 8810 | நந்தன் ஸ்ரோஸ்<br>மடத்தடி கொல்லங்கலட்டி.<br>T.P: 0767367780 |
| நீதன் றில்லிங்<br>மயிலங்கூடல் இளவாலை.<br>T.P.: 077 749 4840 | Green Super Maket<br>மல்லாகம் சந்தி அருகாமை<br>T.P: 077 779 0390 | VSP ரான்ஸ்போட்<br>கொல்லங்கலட்டி.<br>T.P: 077 518 9859 | துசாகன் ரான்போர்ட்<br>கல்லுப்புடுங்கி, கொல்லங்கலட்டி.<br>T.P: 077 431 5350 |

**ஆலய தர்மகர்த்தா**

தொடர்புகளுக்கு: 076 404 3803

(cs.55157) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் 3 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, மே 24

வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு வவுனியாவில் 3 கைதிகள் பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பொது மன்னிப்பின் கீழ் 278 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதனடிப்படையில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறுகுற்றங்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தாமை போன்ற குற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த 3 கைதிகள் விடுவிக்கப்பட்டனர் என வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் கே.ஏ.எஸ். அபயரட்ண தெரிவித்தார். (ச-18)

## விபத்தில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், மே 24

கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்துக்கு முன்பாக அண்மையில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சையின் போது உயிரிழந்துள்ளார்.

மாந்தோப்பு வட்டக்கச்சியைச் சேர்ந்த தம்பிராசா ரவிச்சந்திரன் (வயது-35) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-26)

## சதுரங்க சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 24

தாவடி வேதவிநாயகர் விளையாட்டுக் கழகத்தின் 5 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சதுரங்கச் சுற்றுப் போட்டி நிகழ்வு, யாழ்.தாவடி இந்து தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ப-66)



யாழ்ப்பாணம், அளவெட்டி கும்பளாவளைப்பிள்ளையார் ஆலய வருடாந்த தேர் உற்சவம், நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. (ப-63)


# ...காணவில்லை




அகில இலங்கை சமாதான நீதவானும் புங்குடுதீவை பிறப்பிடமாகக் கொண்டவருமான **வைத்திலிங்கம் கனகலிங்கம்** வயது 82 அவர்களை வைகாசி 12 ம் பகல் 11.30 மணி அளவில் இருந்து காணவில்லை.
இவர் தனது வீட்டுக்கு முன்னால் நின்றவேளையில் உதவும் கரம் கொண்ட ஒருவரின் உதவியுடன் அவரின் வாகனத்தில் இருந்து வேறு இடம் சென்றுள்ளதாக கருதப்படுகிறது. அவரால் தனிப்பட வாகனத்தில் ஏற முடியாது அதேபோல சில மீட்டர் தூரம் கூட தனிப்பட நடக்க முடியாது. வயது மூப்பின் காரணமாக உள்ள ஞாபக மறதியால் மனம் குழம்பிய நிலையில் இருந்த காரணத்தால் அன்று கூட இல்லாத காரணத்தால் பயணத்தை தொடர முடியாமல் நடுவழியில் வாகனத்தில் இருந்து இறக்கிவிட்டு இருக்கலாம். ஞாபக மறதி காரணமாக அவரால் வீடு திரும்ப முடியாது கடந்த பத்து நாட்களாக துயரப்பட்டு கொண்டிருக்கின்றார்
அடையாளம் ஐந்து அடி உயரமும் 40 கிலோ உடல் அமைப்பும் கொண்ட மெலிந்த தேகம் உடைய, காலில் காயமுடன் பொல்லு ஊன்றி நடப்பவர். நெற்றியில் சிறு கட்டி போன்ற போன்ற தழும்பு உண்டு.
இவரை கண்டவர்கள் தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

Contact :
Dr. Kuruparan and Kamalini
076 33 65 770, 074 090 9597

Missing From
12




வலிகாமம் வலய மட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற கரம் போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி முதலிடம் பெற்றுச் சம்பியனாகியது. இரண்டாமிடத்தை வட்டுக் கோட்டை இந்துக் கல்லூரியும் மூன்றாம் இடத்தை சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியும் நான்காம் இடத்தை அராலி சரஸ்வதி இந்துக்கல்லூரியும் பெற்றுக் கொண்டன. (ச-555)

முள்ளிவாய்க்கால் நினைவுக் கஞ்சி வழங்கும் நிகழ்வு, குருநகர் வாழ் மக்களின் ஏற்பாட்டில் குருநகர் சென்.றோக்ஸ் சனசமூக நிலையத்துக்கு அருகில் கடந்த வெள்ளிக்கிழமை நடத்தப்பட்டது. சமூகச் செயற்பாட்டாளர் அ.அருள்பிரகாஸ் தலைமையில் நடந்த நிகழ்வில் மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் இணைத் தலைவர் வேலன் சுவாமிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (25-66)





## வைகாசி விசாக உற்சவம்

யாழ்ப்பாணம், மே 24

முருகப் பெருமானின் அவதார தினமாகிய வைகாசி விசாகத்தை முன்னிட்டு, வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்த சுவாமி ஆலயத்தில் வைகாசி விசாக உற்சவம், நேற்றுமுன் தினம் புதன்கிழமை நடைபெற்றது. (ப-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லா மக்களும் சமம்; அதுவே புத்தரின் போதனை

## யாழ். விகாராதிபதி தெரிவிப்பு

புத்ததர்மத்தில் 'எல்லா மக்களும் சமம்' என்பதையே புத்த பெருமானின் போதனை உணர்த்துகின்றது. இலங்கை வாழ் மக்களாகிய நாம் ஒற்றுமையாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கவேண்டும் என்று யாழ்.நாக விகாராதிபதி ஸ்ரீவிமலதேரர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் வெசாக் பௌர்ணமி தின நிகழ்வு நேற்று வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது விகாராதிபதி ஸ்ரீ விமலதேரர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகத்தின் அனைத்து மக்களினதும் கௌரவம், பாதுகாப்பு, உரிமை என்பவற்றை மையமாகக் கொண்டதே புத்த பெருமானின் தர்ம போதனை. இது உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் சாந்தி, சமாதானம் நல்லிணக்கத்தைப் போதிக்கின்றது - என்றார். (அ-ம-66)

### போராட்டத்தைக்...

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் பணிபுரியும் தமிழ்ப் பொலிஸாருக்கே இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (அ-ம-26)

### தோட்டாவுடன்...

மனைக்கு அருகில்வைத்து அவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைதானவரிடம் இருந்து கைக்குண்டு ஒன்றும் மீட்கப் பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முள்ளியவளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-19)

### கஞ்சாவுடன்...

நடமாடிய ஒருவரைச் சோதனையிட்ட போதே அந்தநபர் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்தமை தெரியவந்தது. இதையடுத்து அவர் கைது செய்யப்பட்டதுடன், சந்தேகநபருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-125)


### வாடகை வீடு தேவை

மூவர் கொண்ட குடும்பத்திற்கு கொமட் வசதி உடைய வீடு கோப்பாய், புன்னாலைக் கட்டுவன், குப்பிளான் பகுதிகளில் உடன் தேவை.
(உரியவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்).

தொடர்பு:- 077 818 5978



### வேலை ஆட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

மேலும்


1) சிட்டை போடுபவர் (கணினி) (Bill Clerk)
2) விற்பனையாளர் (Salesman)
3) பைக்கிங் செய்பவர் (Packing)
4) காசாளர் (Cashier)

தொடர்புக்கு: 076 962 4477


## கண்ணீர் அஞ்சலி

### அமரர் தேவராசா கருணாநிதி

(அஞ்சல் உதவியாளர் - காரைநகர் அஞ்சல் அலுவலகம்)



தோற்றம் 14.07.1977 மறைவு 23.05.2024

மீளாத்துயில் கொண்டு எம்மை
ஆறாத்துயரில் ஆழ்த்திச் சென்றீரே?
கலையாத நினைவுகளுடன் உதிரும்
கண்ணீர் பூக்களால் அர்ச்சித்து
உங்கள் ஆத்மா சாந்தியடைய எங்கள்
கண்ணீர் துளிகளைக்
காணிக்கையாக்குகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
அஞ்சல் சமூகம்,
காரைநகர் அஞ்சல் அலுவலகம்

(CR/42491) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 05.11.1930 மறைவு 22.05.2024

### சின்னப்பு ஆறுமுகம்

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் இல.05, மணிக்கூட்டு ஒழுங்கையை வதிவிடமாகவும், பிரான்ஸ் மற்றும் பிரித்தானியாவை வாழ்விடமாகவும் கொண்ட சின்னப்பு ஆறுமுகம் அவர்கள் கடந்த (22.05.2024) புதன்கிழமை லண்டனில் இயற்கை எய்திவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், மார்க்கண்டு, செல்லையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கந்தையா - கண்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், பூமணியின் ஆருயிர்க்கணவரும், கனகரஞ்சிதம் (UK), சரோஜா (பவானி - UK), புனிதவதி (UK), குணசீலன் (சீலன் -UK), றோகினி (UK), மாலதி (UK), சுமதி (பிரான்ஸ்), அறிவழகன் (ஜெயா - UK), விஜிதா (UK) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், இராஜதுரை, பாலச்சந்திரன், சிறிதரன், தயாளினி, செல்வகுமார், றோய் (மூர்த்தி), சுகுமார், சுகந்தினி, இரஜீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நீரஜா, சுதர்சன், பிரியங்கா, ரஜீவ், தர்ஷன், நித்தியா, கார்த்தீபன், சத்தீஸ்வரன், டெனிஷன், பிரியந்தி, கோணர் (Conor), ஜெந்துஜா, வருண், ஜொனத்தன், சோபிகா, கௌசிகா, பிரகாஷ், நிகேஷ், அனோஜ், பிரிந்தா, சர்னியா, லக்சிகா, கீர்த்திகா, ஆகேஷ், ஆதித்தியன், அனிஷன், ஆதனாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், ஜஸ்வினா, கவின், டிலான், அகானா, சஞ்சனா, ஆரன், சைந்தவி ஆகியோரின் பெருமைக்குரிய பூட்டனும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்

தகவல்:
குடும்பத்தினர் (லண்டன்)

(CS 567) A-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 30 . 05 . 1956 மறைவு 16 . 05 . 2022

### அமரர் இராசா பொன்குமார்

(உரிமையாளர் - ஐங்கரன் வெதுப்பகம், கோப்பாய் சந்தி, கோப்பாய், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். உரிமையாளர் - சரஸ்வதி விலாஸ், கோப்பாய் சந்தி, கோப்பாய்.)

**திதி : பிரதமை**

வையகம் போற்ற வாழ்ந்து
வானுறையும் தெய்வமதாய்
இயற்கையில் இணைந்து
பழுதில்லாப் புதுமலராய் - என்றும்
எம் இதயங்களில் மணம் வீசும் அன்பு நிறை அப்பாவே!

ஈராண்டு காலம் சென்றும்
ஈரவிழி காயாமல் - எம்
உள்ளத்தில் உத்தமசீலராய் வாழ்கிறீர்கள்
உங்கள் குரல் கேட்காமல்
எந்நாளும் ஏங்குகின்றோம்
நாங்கள் எங்கு சென்றாலும்
நீங்கள் நிழலாய் பயணிக்கும்
அந்த உணர்வுதான் - எங்களை
இதுவரை காலமாய் இவ்வுலகில் வைத்துள்ளது...

இல.30, சீனியர் லேன்,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(CS 565) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புக்கூறல்...

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய - பசுபிக் இயக்குநர் எலைன் பியர்சன் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முடிவடைந்த உள்நாட்டு யுத்தத்தின் போது ஸ்ரீலங்கா படையினர் இழைத்த அநீதிகளை ஸ்ரீலங்கா அரசாங்கம் தொடர்ந்தும் மறுத்துவருகின்றது. இதன் காரணமாக உண்மை, நீதி, இழப்பீடு போன்றவற்றை வழங்குவதற்குப் பதிலாக ஸ்ரீலங்கா அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களின் சமூகத்தினரையும் மௌனமாக்க முயல்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும், துஷ்பிரயோகங்கள் நிகழாமல் தடுப்பதற்கும் சர்வதேச நடவடிக்கைகள் அவசியம் என்பது புலனாகின்றது.

மே 18 ஆம் திகதி நினைவேந்தல் தினத்துக்கு முன்னர் வடக்கு-கிழக்கில் நினைவேந்தல் நிகழ்வுகளை ஸ்ரீலங்காப் பொலிஸார் குழப்ப முயன்றனர். யுத்தத்தின்போது நிலவிய பட்டினி நிலையைக் குறிக்கும் விதத்தில் வழங்கப்படும் கஞ்சியை தயாரித்து வழங்கியமைக்காக நால்வரைக் கைதுசெய்து ஒருவாரம் தடுத்து வைத்திருந்தனர்.

காணாமற்போனவர்களின் உறவினர்கள் சிலரும் ஏனையவர்களும் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொள்வதை தடைசெய்யும் விதத்தில் ஸ்ரீலங்கா பொலிஸார் நீதிமன்ற உத்தரவுகளையும் பெற்றிருந்தனர். சில இடங்களில் பொலிஸார் தலையிட்டு நிகழ்வுகளைத் தடுத்து மக்கள் அங்கு செல்வதை நிறுத்தினர்.

ஐக்கிய நாடுகள் சபையின் புதிய அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளின்படி, வலிந்து காணாமலாக்கப்பட்டமை ஸ்ரீலங்காவில் இடம்பெற்றது என்பதையும் அதன் அளவையும் ஸ்ரீலங்கா அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். உடனடி நம்பகத்தன்மை மிக்க விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும், மனிதப் புதைகுழிகளை தோண்டுவதற்கு சர்வதேச தொழில்நுட்ப உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (அ-ம)

## தாழமுக்கம்...

உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புயலுக்கு இம்முறை ஓமான் நாடு பெயர்சூட்டுவதாக இருந்தது. அந்த நாடு 'றெமால்' என்று பெயர் சூட்டியுள்ளது.

இந்தப் புயல் எதிர்வரும் 26ஆம் திகதி இந்தியாவின் ஒடிஸாவுக்கும், மேற்கு வங்க மாநிலத்துக்கும் இடையில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், தாழமுக்கம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட்ட நாட்டின் பல பகுதிகளுக்கும் கனமழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாகவும் வானிலையாளரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளருமான நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இந்தப் புயலால் இலங்கையின் எந்தவொரு பகுதிக்கும் எத்தகைய பாதிப்பும் ஏற்படாது. எனினும் முன்னரே குறிப்பிட்டபடி எதிர்வரும் 25ஆம் திகதி வரை இலங்கையின் கடற்பகுதிகள் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் மீனவர்கள் கடலுக்குச் செல்வதைத் தவிர்ப்பது சிறந்தது.

2024 ஆம் ஆண்டுக்கான தென்மேற்குப் பருவமழை இலங்கையில் எதிர்வரும் 28 அல்லது 29ஆம் திகதி, ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் ஜுன் மாதம் முதல் லாநினோவின் செல்வாக்கு வடக்கு இந்து சமுத்திரத்தில் நிலவும் என்பதனால் இவ்வாண்டு தென்மேற்குப் பருவ மழை சராசரியைவிடவும் உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ் ஆண்டின் தென்மேற்குப் பருவக்காற்றுக் காலப் பகுதியில் (செப்ரெம்பர் வரை) தொடர்ச்சியான, மிகச் செறிவான மழை வீழ்ச்சி 3 அல்லது 4 சந்தர்ப்பங்களில் கிடைக்கும் என்பதனால் இலங்கையின் மத்திய, மேற்கு, தெற்கு மற்றும் தென் மேற்குப் பிரதேசங்கள் இவ்வாண்டும் வெள்ள இடரால் பாதிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது - என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-66)

## திருகோணமலையில்...

விபத்துக்குள்ளானது. இதில் ஆறு வயதுச் சிறுமி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

அல்வாயைச் சேர்ந்த குடும்பமொன்று யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலை ஊடாக மட்டக்களப்பு நோக்கிச் சுற்றுலாவுக்காக காரில் சென்றுகொண்டிருந்தபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்தில் கணவன், மனைவி இருவரும் தெய்வாதீனமாக உயிர் தப்பித்த நிலையில் அவர்களது மகளான நிதர்சன் அதிதி (வயது-6) எனும் சிறுமி உயிரிழந்துள்ளார். சிறுமியின் சகோதரனான நிதர்சன் அதிரேஸ் (வயது-4) எனும் சிறுவன் காயமடைந்த நிலையில் திருகோணமலை மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். ஈச்சிலம்பற்றுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66-100-50)

## அனுமதியின்றி...

மாநகரசபையின் ஆட்சிக்காலத்தில், யாழ்ப்பாணம் ஆரியகுளம் பகுதியில் எந்தவொரு அலங்காரத்தையும் முன்னெடுக்கும்போதும் அது தொடர்பில் மாநகரசபையிடம் அனுமதி பெறப்படவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆட்சிக் காலத்தின்போது ஆரியகுளம் பகுதியில் மதம் சார்ந்த எந்தவொரு அலங்காரங்களும் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது மாநகரசபையின் பதவிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில், இராணுவத்தினரால் அங்கு அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகரசபையின் ஆணையாளரைத் தொடர்புகொண்டு கேட்டபோது; இராணுவத்தினர் ஆரியகுளப் பகுதியை துப்புரவு செய்துதரும்படியே கேட்டனர். ஆனால், அங்கு அலங்காரம் மேற்கொள்ள அனுமதி பெறவில்லை - என்றார். (அ-ம-125)

## இலங்கையின்...

துள்ளது. இது தொடர்பில் ரஷ்யத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் உள்ளதாவது:

மனித உரிமைகள் விவகாரத்தைக் காரணம் கூறிக்கொண்டு இலங்கையின் உள்ளக விவகாரங்களில் மேற்குலக நாடுகள் அதீதமாகத் தலையிடுகின்றன. இந்த மனித உரிமை அமைப்புகளின் இரட்டை நிலைப்பாடு ஒன்றும் புதிதல்ல. காஸாவுக்காக கவலைப்படும் இவர்கள், நேட்டோ நாடுகள் யூகோஸ்லாவியா, ஆப்கானிஸ்தான், லிபியா போன்ற நாடுகளில் மேற்கொண்ட மனித உரிமை மீறல் கள் பற்றி ஏன் பேசுவதில்லை?. ஜனநாயகம் பற்றி பேசும் இவர்கள் பால்டிக்நாடுகளில் வாழும் ரஷ்ய சிறுபான்மையினரை என்ன செய்கின்றனர்? இவ்வாறான பல கேள்விகள் பொதுமக்களிடமிருந்து எழுகின்றன - என்றுள்ளது. (அ-ம-6)

## இந்தியாவின்...

தெரிவித்ததாவது:- ரணில் தற்போது விபீஷணனின் பாத்திரத்தை ஏற்றுச் செயற்பட்டு வருகிறார். புதுடில்லி படிப்படியாக இலங்கையைக் கைப்பற்றி வருகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பாலம் அமைப்பது பற்றி பேச்சு அடிபடுகிறது. இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பாலம் அமைக்கப்பட்டால் இலங்கை மிக விரைவிலேயே சிக்கிம் போல இந்தியாவின் மாநிலமாக மாறிவிடும். ஏனெனில், 1975ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி சர்வஜன வாக்கெடுப்பு மூலம் சிக்கிம் அங் கீகரிக்கப்பட்டது.

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பாலம் அமைக்கப்பட்டால் இந்தியர்கள் பஸ்களில் இங்கு வருவார்கள். இந்திய நாணயம்தான் புழக்கத்தில் இருக்கும். நான் முன்பு அங்கம் வகித்த ஜே.வி.பி. மௌனமாக ரணிலுடன் இணைந்து இந்திய விஸ்தரிப்பை அங்கீகரிக்கிறது.

எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பாடசாலைகளுக்கு அன்பளிப்புச் செய்யும் பஸ்களை டிமோ நிறுவனம் இலவசமாக வழங்குகிறது. சஜித்துக்கு எதாகடிமோ நிறுவனம் பஸ்களை இலவசமாக வழங்குகிறது என்று நீங்கள் சிந்தித்துப்பார்க்க வேண்டும் - என்றார். (அ-ம-6)

## சிறுமி...

பாதிக்கப்பட்ட சிறுமி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். தலைமறைவாகியுள்ள நபரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் தீவிரப்படுத்தியுள்ளனர். (அ-ம)


## காணி விற்னைக்குண்டு

சாவகச்சேரி பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் A-9 வீதியில் மூன்று பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

(விலை குறைக்கப்பட்டுள்ளது)

தொடர்புக்கு: 076 930 1811


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 06 . 04 . 1957

இறப்பு 04 . 06 . 2023



### சண்முகநாதன் விஜயலட்சுமி

ஈரவிழியோடு ஓராண்டு சென்றாலும்
மாறாது எம்துயர்
துடுப்புக்கள் இல்லாத தோனிகள்போல்
தவிக்கின்றோம் உம் பிரிவால்
நிஜமாய் கண்ட உம்மை
நிழற்படமாய்ப் பார்க்கும் போது
நெஞ்சம் விம்முகிறது..
உம்மிடத்தை நிரப்பிடவே
அண்டம் எல்லாம் தேடிவிட்டோம்
உமக்கிணையாய் யாருமில்லை
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
துளி கூட அழியாது உம் நினைவு
அளவற்ற உம் அன்பிற்காய்
அலைகிறது எங்கள் மனம்
மறுபடியும் உங்கள் வருகைக்காய்
காத்திருப்போம் இவ்வுலகில்
தெய்வமே என்றும் உங்கள் நினைவுடன்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

[illegible] இணுவில் கிழக்கு.

குடும்பத்தினர்.

(CS/55159) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'திரை உலா' நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 24
மூத்த எழுத்தாளர் அ.யேசுராசா எழுதிய திரைப்படக் கட்டுரைகளின் தொகுப்பு நூலான 'திரை உலா' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு, நல்லூர், அம்மன் வீதியில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்வியல் ஆசிரிய ஆலோசகர் ஜோன்சன் ராஜ்குமார், யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறை முதுநிலை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், எழுத்தாளர் ந.மயூரரூபன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-66)


## வீடுகள் வாடகைக்கு

யாழ்ப்பாணம், கொழும்பு பகுதிகளில் மாதம், கிழமை, நாள் வாடகைக்கு வீடுகள் தேவையானவர்கள் தொடர்பு கொள்ளலாம்.

076 311 9485, 076 050 3863




மே 18 இனப்படுகொலை நினைவில் கற்சிலைமடு பரந்தாமன் விளையாட்டுக்கழகத்தால் கற்சிலைமடுக் கிராமத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை சமூக சேவை ஏற்பாட்டாளர் சுதாகரன் தலைமையில் நடைபெற்றது. (ச-500)


## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 173 7684

## பணியாளர் வெற்றிடம் யாழ்ப்பாணம்

- எழுதுநர் (ஆண் / பெண்) (அனுபவம் விரும்பத்தக்கது)
- வெல்டர் (welders)
- தச்சுத் தொழிலாளி (Carpenter)
- தொழிற்சாலை உதவியாளர்கள் (ஆண்/ பெண்)

✓ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
✓ நேர்முகத்தேர்வு 25.05.2024 காலை 10.00 மணிக்கு அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

EUT
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
யாழ்ப்பாணம்.

021 224 0110, 077 656 6873

(CR/42490)J-1


கிராம அலுவலர்களுக்கு

## மேலதிக கொடுப்பனவு

கொழும்பு, மே 24
கிராம அலுவலர்களுக்கு மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. நாட்டில் உள்ள 13 ஆயிரம் கிராம அலுவலர்களுக்கு இவ்வாறு மேலதிகக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. எனினும், ஊதிய உயர்வாக இல்லாமல் மேலதிகக் கொடுப்பனவாகவே இந்தத் தொகை வழங்கப்படவுள்ளது. இது தொடர்பான ஆவணங்கள், பொதுநிர்வாக அமைச்சுக்கு உரிய நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. (அ-ம-6)


## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு (G.G பொன்னம்பலம் வீதி) பலாலி வீதியில் இருந்து 200m தூரத்தில் 3வது காணி 27 பரப்பு தோட்டக் காணி 5 அறை வீட்டு அத்திபாரத்துடன் விற்பனைக்கு உண்டு.

தரகர் தேவை இல்லை.

தொடர்பு:- 076 877 5021

## வாகனம் வாடகைக்கு


ISUZU, 14 1/2 அடி ISUZU கூலர் வாகனம் சாரதியுடன் வாடகைக்கு விடப்படும்.
அரச நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.

(CS/28270) J-1

தொடர்பு:- 077 921 3835

# 35ம் நாள் நினைவு

தோற்றம்
27 • 08 • 1943



மறைவு
20 • 04 • 2024

## நன்னித்தம்பி கந்தராசா

திதி - துவாதசி

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

APC, லேன்,
உடுவில் மேற்கு, சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/55144) J-1

# TECHNO WORLD

தொழில்நுட்பக் கல்லூரி
வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை,
யாழ்ப்பாணம்.

## A/L 2026

## தொழில்நுட்பப் பிரிவு

- ஆரம்பம் - 25.05.2024 (சனிக்கிழமை)
- நேரம் - காலை 8.30

## A/L 2024, 2025
வகுப்புகள் நடைபெறுகின்றன

தொடர்புகளுக்கு: 077 017 5346

# பாராட்டி வாழ்த்துகின்றேன்

2022 A/L பரீட்சையில் தோற்றி என்னிடம் வணிகக் கல்வியை ஒரு பாடமாகக் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகம் தெரிவானோரை பாராட்டி வாழ்த்துகின்றேன்.
"சொல் அல்ல செயல்"

## வணிகக்கல்வி வளவாளர்

## S.K. BALASABESH
B.Com [(H.N.Dip.In.Acc (ATI)], P.G.Dip.In. Edu.(OUSL)
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

மாவட்ட நிலை முதல் 10 இற்குள் இடம் பெற்றோர்



ஆன்மிநுஜா
3A NEC
மாவட்ட நிலை – 01
யாழ்ப்பாணம்
(முகாமைத்துவம்)
(J / C / G / C)



துஷாமினி
3A NEC
மாவட்ட நிலை – 02
(Kn / M / M / N)



புராதனி
3A NEC
மாவட்ட நிலை – 03
ஸ்ரீஜெயவர்த்தனபுரம்
(முகாமைத்துவம்)
(J / H / L / C)



அனால்ட் குருஸ்
3A NEC
மாவட்ட நிலை – 04
(மன்னார்)
ஸ்ரீஜெயவர்த்தனபுரம்
(முகாமைத்துவம்)
(St / J / M / V)



மேனகா
3A NEC (zoom)
மாவட்ட நிலை – 04
ஸ்ரீஜெயவர்த்தனபுர
(முகாமைத்துவம்)
(N/C/C)



தர்ஷிகா
3A NEC
மாவட்ட நிலை – 05
ஸ்ரீஜெயவர்த்தனபுரம்
(முகாமைத்துவம்)
(J/H/L/C)



வைஷ்ணவி
3A NEC
மாவட்ட நிலை – 08
ஸ்ரீஜெயவர்த்தனபுரம்
(வணிக தகவல்
முகாமைத்துவம்)
(J/H/F/C)

| இல | பெயர் | பல்கலைக்கழகம் | கற்கைநெறி | கல்விநிறுவகம் |
|---|---|---|---|---|
| 08 | தில்பனா | பேராதனை | முகாமைத்துவம் | பிரத்தியேக வகுப்பு |
| 09 | பானுஜா | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் | முகாமைத்துவம் | NEC |
| 10 | சாருஜா | பேராதனை | முகாமைத்துவம் | பிரத்தியேக வகுப்பு |
| 11 | லவன்யா | கொழும்பு | முகாமைத்துவம் | NEC |
| 12 | நிலாஜினி | கொழும்பு | முகாமைத்துவம் | HAC |
| 13 | தனோசலா | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் | நிதி பொருளியியல் | HAC |
| 14 | கிருத்திகா | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் | தகவல் முகாமைத்துவம் | NEC |
| 15 | ஆர்னோல்ட் | பேராதனை | முகாமைத்துவம் | NEC |
| 16 | அனுசியா | மொறட்டுவ | வசதிகள் முகாமைத்துவம் | HAC |
| 17 | துவிதா | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் | வணிகதகவல் முகாமைத்துவம் | பிரத்தியேக வகுப்பு |
| 18 | துஷ்யந்தன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 19 | அருட்செல்வி | பேராதனை | முகாமைத்துவம் | NEC |
| 20 | கம்சிகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 21 | சதீஷா | மொறட்டுவ | விஞ்ஞான முகாமை | NEC |
| 22 | கமில்ரன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 23 | அபிலாஷ் | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் | பொது முகாமைத்துவம் | பிரத்தியேக வகுப்பு |
| 24 | தமிழினி | வவுனியா | வங்கி காப்புறுதி | NEC |
| 25 | யதுர்ஷன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | பிரத்தியேக வகுப்பு |
| 26 | மார்க் அன்ரனி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 27 | மிலானி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 28 | கின்சி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 29 | சஹாரான் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 30 | டிலோஜினி | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் | சொத்து முகாமைத்துவம் | பிரத்தியேக வகுப்பு |
| 31 | சுவேதா | ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம் | சொத்து முகாமைத்துவம் | NEC |
| 32 | டிசாந்தன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 33 | கஸ்தூரியா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 34 | லிசானா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 35 | கபிலா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 36 | மொகமட் ஆசிக் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 37 | சுயானா | ராஜரட்டை | முகாமைத்துவம் | பிரத்தியேக வகுப்பு |
| 38 | ஸ்னேகா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 39 | தனுசியா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 40 | தர்சினி | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 41 | றஜினா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 42 | ஜொய்தா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 43 | டயானா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 44 | யுகிர்தன் | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | NEC |
| 45 | பிரதிக்ஸா | யாழ்ப்பாணம் | முகாமைத்துவம் | HAC |
| 46 | நிஷாந்தி | தென்கிழக்கு | வணிகவியல் | NEC |
| 47 | வைஷாலி | திருகோணமலை | முகாமைத்துவ கற்கை | HAC |
| 48 | மர்லின்சாரா | தென்கிழக்கு | வணிகவியல் | NEC |

2026 A / L வகுப்பு NEC, HAC, SKB Bussiness Hall, Subra, 25.05.2024 ஆரம்பம்
எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.05.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.